www.agaram.lk

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 9 | வரலாறு | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ...............................................................................

### பகுதி I

* **மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. கி.பி 17ம் நூற்றாண்டு காலப்பகுதியில் கீழைத்தேய நாடுகளில் ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பிய இனத்தவர்.
    1. போர்த்துக்கேயர்  2. ஒல்லாந்தர்  3. பிரான்சியர்  4. ஆங்கிலேயர்

02. இலங்கையை வந்தடைந்த ஒல்லாந்தர் முதன் முதலாக சந்தித்த கண்டி அரசன்.
    1. விஜய இராஜசிங்கன்  2. கீர்த்திஸ்ரீஇராஜசிங்கன்
    3. 1ம் விமலதர்மசூரியன்  4. 2ம் விமலதர்மசூரியன்

03. போர்த்துக்கேயருடன் போரிட்டு ஒல்லாந்தர் கோட்டைகளை கைப்பற்றும் போது கி.பி 1658ல் கைப்பற்றப்பட்ட கோட்டைகள்.
    1. காலி, நீர்கொழும்பு  2. திருகோணமலை, மட்டக்களப்பு
    3. மன்னார், யாழ்ப்பாணம்  4. நீர்கொழும்பு, மன்னார்

04. கண்டியில் ஆட்சிசெய்த அரசர்களுள் “திரிசிங்களாதீஸ்வர” என்று தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட அரசன்.
    1. 1ம் இராஜசிங்கன்  2. 2ம் இராஜசிங்கன்
    3. 2ம் விமலதர்மசூரியன்  4. 4ம் விமலதர்மசூரியன்

05. நிரல் I ல் உள்ள அரசர்களையும், நிரல் IIல் உடன்படிக்கையை ஏற்படுத்திய தளபதிகளையும் இணைக்கும் போது பெறப்படும் விடை.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. 2ம் விமலதர்மசூரியன் | A. அடம்ஸ் வெஸ்ரர்வோல்ட் |
| 2. கீர்த்திஸ்ரீஇராஜசிங்கன் | B. லோறன்ஸ் பீல் |
| 3. 2ம் இராஜசிங்கன் | C. வில்லெம் பெல்க் இம்ஹோப் |

    1. BAC  2. BCA  3. ACB  4. CAB

06. 2ம் இராஜசிங்கமன்னனது காலத்தில் இடம்பெற்ற முக்கிய தூதுப்பயணமாக கருத்கூடிய விடயமானது.
    1. போர்த்துக்கேயரைத் துரத்துவதற்கு ஒல்லாந்தர் உதவி செய்தமை
    2. ஜெனரல் ஜெராட்ஹல்ப்ட் அரசணை சந்தித்தமை
    3. அரசனுக்கு தேவையான பரிசுப் பெபாருட்களை வழங்கியமை
    4. ஒல்லாந்தருடன் கடிதத்தொடர்பை கொண்டிருந்தமை

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

07. கி.பி 1753ல் உபசம்பதா விழாவை நடாத்தியதுடன் இலங்கையில் சீயம் நிக்காயாப் பிரிவை ஆரம்பித்த மன்னனாக கருதக்கூடியவன்.

1. விஜய இிராஜசிங்கன்
2. இராஜாதி இராஜசிங்கன்
3. விக்கிரம இராஜசிங்கன்
4. கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன்

*** கீழ்வரும் கூற்றுக்களைக் கொண்டு 8ம், 9ம், 10ம் வினாக்களுக்கு விடை தருக.**

A - எளிமையானதும், செலவு குறைந்ததுமான மன்றம்

B - பிரதானி வுப்ட் அத்மினிஸ்தார் ஆவார்.

C - விதானை, முதலி, கோறளை போன்றோருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

D - ரிக்ஸ் டொலர் 120ற்கும் நட்டம் தொடர்பான வழக்குகள் விசாரிக்கப்படுதல்.

08. ஒல்லாந்தரது காலத்தில் திஸாவை நீதிமன்றத்துடன் தொடர்புடைய கூற்றானது.

1. A
2. B
3. C
4. D

09. கூற்று "B" உடன் தொடர்புடைய நீதிமன்றமாக கருதக்கூடியது.

1. சிவில் நீதிமன்றம்
2. ரத்வான் நீதிமன்றம்
3. கிராம நீதிமன்றம்
4. காணி நீதிமன்றம்

10. காணி நீதிமன்றம், சிவில் நீதிமன்றம் போன்றவற்றுள் தொடர்புடைய கூற்றுக்களானது.

1. AB
2. BD
3. AD
4. AC

11. இலங்கையின் கரையோரப் பிரதேசம் பிரித்தானியரால் கைப்பற்றப்படும் போது கண்டியை ஆட்சி செய்த அரசன்.

1. விஜய இராஜசிங்கன்
2. கீர்த்திஸ்ரீஇராஜசிங்கன்
3. இராஜாதிராஜசிங்கன்
4. விக்கிரம இராஜசிங்கன்

12. பிரித்தானியர் இலங்கை மீது கவனம் செலுத்தியமைக்கான காரணங்களுள் பிரதானமானதாக கருதக்கூடியது.

1. பிரித்தானியர்களுக்குத் தேவையான வர்த்தகப் பொருட்கள் கிடைத்தமை
2. திருகோணமலைத் துறைமுகம் முக்கியத்துவம் பெற்றமை
3. பிரான்சியரை இலங்கையிலிருந்து துரத்த வேண்டும்
4. இலங்கையில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டும்

13. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானிய நிர்வாகம் தொடர்பாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற முதலாவது ஆளுநர்.

1. தோமஸ் மெயிற்லன்ட்
2. பிரட்ரிக் நோர்த்
3. ஜோன் டொய்லி
4. றொபேட் பிரவுன்றிக்

14. கி.பி 1800ல் ஆங்கிலேயருக்குத் சாதகமான நிபந்தனைகளுடன் கண்டி அரசனை சந்தித்த தளபதி.

1. ஜோன்கிரன்வில்
2. மேஜர் டேவி
3. ஜோன்டொய்லி
4. மெக்டோவல்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

15. கி.பி 1797ல் இடம்பெற்ற கரையோரக் கலகத்திற்கான காரணங்களை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட குழு.
    1. கோல்புறூக் ஆணைக்குழு
    2. டொய்லி ஆணைக்குழு
    3. மியுறன் ஆணைக்குழு
    4. குறும் ஆணைக்குழு
16. பழைய தண்டணையை ஒழித்து, மரண தண்டனைனை நிறைவேற்றுதல் ஆளுநரின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். என கண்டியில் கூறப்படும் வாசகம்.
    1. 4ம் வாசகம்
    2. 5ம் வாசகம்
    3. 8ம் வாசகம்
    4. 7ம் வாசகம்
17. கி.பி 1818ம் ஆண்டு கலகத்திற்கான அண்மிய காரணமாக கருதக்கூடியது.
    1. அரசன் இல்லாமை பற்றிய மனவேதனை காணப்பட்டமை
    2. ஹஜ்ஜி மரிக்கார் முகாந்திரமாக நியமிக்கப்பட்டமை
    3. பிரித்தானியர் காலத்தில் சமயம் அழிந்துவிடும் எனபயந்தமை
    4. கலாசாரமும், பழக்கவழக்கமும் அழிவடையும் என கருதியமை
18. விக்கிரம இராஜசிங்கன் கண்டியில் அரசனாகுவதற்கு துணையாக நின்ற பிரதம பிரதானியாக கருதக்கூடியவர்.
    1. ஏஹலபொல
    2. 1ம் பிலிமலாத்தலாவ
    3. 2ம் பிலிமலத்தலாவ
    4. மொல்லிகொட
19. கி.பி 1803ல் பிரித்தானியர் கண்டிமீது படையெடுத்தபோது விக்கிரம இராஜசிங்கன் பாதுகாப்பிற்காக தப்பியோடிய இடம் எது?
    1. மெதமஹநுவர
    2. செங்கடகல
    3. ஹிங்குரான்கெத்தை
    4. போகம்பரை
20. கி.பி 18ம் நூற்றாண்டில் இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பிய இனத்தவர்.
    1. ஒல்லாந்தர்
    2. போர்த்துக்கேயர்
    3. பிரான்சியர்
    4. பிரித்தானியர்

(20 x 2 = 40 புள்ளிகள்)



agaram.lk

## பகுதி II

கவனிக்குக :-

1ம் வினாவிற்கும், ஏனைய நான்கு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. கீழ்வரும் வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய எழுத்தினையும், அவை குறிக்கும் இடங்களையும் முறையே எழுதுக.

அ. இலங்கையில் காணப்பட்ட இறுதி இராசதாணியும் எழுத்தும்


ஆ. ஒல்லாந்தர் முதன் முதலில் வந்திறங்கிய இடமும் எழுத்தும்

இ. 2ம் இராஜசிங்கனுடன் ஒல்லாந்தர் முரண்பட காரணமான கோட்டையும் எழுத்தும்.

ஈ. ஒல்லாந்தரது காலத்தில் வடபகுதியில் காணப்பட்ட கொகான்டரியும் எழுத்தும்

உ. பிரித்தானியர் முதன் முதலில் வந்திறங்கிய இடமும் எழுத்தும்

ஊ. ஒல்லாந்தரிடமிருந்து பிரித்தானியர் கைப்பற்றிய கோட்டைகளுக்குள் இறுதியானதும், அதன் எழுத்தும்




(6 x 2 = 12 புள்ளிகள்)

02. 1. கி.பி 15ம் நூற்றாண்டின் பின்னர் இலங்கையை ஆட்சி செய்த ஐரோப்பிய இனத்தவர்கள் மூவரை குறிப்பிடுக.

2. கீழ்வருவனவற்றிக்கு பொருத்தமான விடை தருக.

A – 1ம் விமலதர்மசூரியனை சந்தித்த இரண்டாவது ஒல்லாந்து தளபதி

B – ஒல்லாந்தரின் கீழைத்தேய மத்திய நிலையம் அமைந்திருந்த தீவு

C – கலன் அல்ப்ஸ் என்ற ஒல்லாந்து தூதுவன் தொடர்பினை மேற்கொண்ட கண்டி அரசன்.

D – குண்டசாலை இளவரசன் என அழைக்கப்பட்ட கண்டி அரசன்

3. கி.பி 1638ல் கண்டி அரசனுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அம்சங்கள் மூன்றினை குறிப்பிட்டு ஒன்றை சுருக்கமாக விளக்குக.

(3 + 4 + 5= 12 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

03. 1. 2ம் இராஜசிங்கனுக்கு பின்னர் ஒல்லாந்தர் தமது தூதுத் தொடர்பை கொண்டிருந்த கண்டி அரசர்கள் மூவரைத் தருக.

2. A – ஒல்லாந்தருக்கும் கண்டி அரசர்களுக்கும் இடையிலான தூதுத் தொடர்புகளின் போது முக்கியம் கொடுக்கப்பட்ட விடயங்கள் இரண்டு தருக.

B – 2ம் விமலதர்மசூரியனுடன் ஒல்லாந்தர் சமாதானமாக செயற்பட்டமைக்கு இரண்டு விடயங்கள் தருக?

3. தூதுப்பயணங்களின் போது ஒல்லாந்தர் மன்னனுக்கு வழங்கிய பொருட்கள் மூன்றினையும், அரசன் ஒல்லாந்தருக்கு வழங்கிய பொருட்கள் இரண்டினையும் தருக?

(3 + 4 + 5= 12 புள்ளிகள்)

04. 1. ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் இருந்த கொமாண்டரிகள் மூன்றினை குறிப்பிடுக.

2. ஒல்லாந்தர் தமது நீதிமன்ற நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு நிறுவப்பட்ட நீதிமன்றங்கள் நான்கினை தருக.

3. ஒல்லாந்தர் தமது மேலதிக இலாபத்தை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினை குறிப்பிட்டு ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

(3 + 4 + 5= 12 புள்ளிகள்)

05. 1. கீழ்வரும் ஆண்டுகளில் கண்டி அரசர்களை சந்தித்த பிரித்தானிய தளபதிகளை முறையே தருக?

A – கி.பி 1795 2. கி.பி 1782 3. கி.பி 1762

2. A – பிரித்தானியர் இலங்கையில் மேற்கொண்ட ஆட்சி முறைகள் இரண்டினை தருக.

B – கி.பி 1797 கரையோர கலகம் ஏற்பட்டமைக்கான காரணங்கள் இரண்டு தருக.

3. கி.பி 1803 கண்டி இராசதாணி ஆக்கிரமிக்கப்பட்டமைக்கான காரணங்கள் மூன்றினை குறிப்பிட்டு ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

(3 + 4 + 5= 12 புள்ளிகள்)

06. 1. கி.பி 1815ம் ஆண்டு இடம்பெற்ற கண்டி உடன்படிக்கையில் கூறப்பட்ட வாசகங்கள் மூன்று தருக.

2. 1818ம் ஆண்டு போராட்டத்தில் முக்கியத்துவம் பெற்ற தலைவர்கள் நால்வரை குறிப்பிடுக.

3. 1818 போராட்டத்தின் தோல்விக்கான காரணங்கள் மூன்றினையும், அதன் விளைவுகள் இரண்டினையும் தருக?

(3 + 4 + 5= 12 புள்ளிகள்)



agaram.lk